# தோத்திரமாலை

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

❖ நான்கு திருக்கரங்களையும் ஐந்தாவது கரமாகிய துதிக்கையையும் ஓங்கார வடிவமாகிய யானை முகத்தையும், சந்திரப் பிறை போன்ற தந்தங்களையும் உடைய சிவகுமாரனாகிய ஞானக்கொழுந்தை எனது மனதில் கொண்டு அவனது சித்தி, புத்தி எனும் திருவடிகளை வணங்குகின்றேன்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்பு வர்தம் கை.

❖ விநாயகர் செல்வத்தை அதிகரிக்கும்படிச் செய்வார்.
❖ செய்கின்ற காரியங்கள் எல்லாம் வெற்றியாகும்படி உதவுவார்.
❖ பேச்சுவன்மையைத் தருவார்.
❖ பெருமையைப் பெருகச் செய்வார்.
❖ உடம்பைத் திடம் ஆக்குவார்.
❖ ஆதலால், அவரைத் தேவர்களும் பக்தியோடு கும்பிட்டு வழிபடுவார்கள் (நாமும் வணங்கி வழிபடுவோமாக.)

## சமயாச்சாரியர்கள் துதி

புழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி

- பாண்டிய மன்னன் நெடுமாறனது சுரநோயைத் தீர்த்த திருஞான சம்பந்தரது திருவடிகளுக்கு வணக்கம்.
- கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலிலிருந்து கரையேறிய திருநாவுக்கரசருடைய திருவடிகளுக்கு வணக்கம்.
- திருநாவலூரில் வன்றொண்டராய்த் தோன்றிய சுந்தரர் திருவடிகளுக்கு வணக்கம்.
- பிரளயகாலத்தும் அழியாத திருவாதவூரில் தோன்றிய மாணிக்கவாசக சுவாமிகள் திருவடிகளுக்கு வணக்கம். (3)

## சிவபெருமான் துதி
## சம்பந்தர் தேவாரம்

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

- ஆர்வம் மிகுந்து, அதனால் மனம் இளகி, கண்ணீரொழுகப் பாடுகின்றவர்களை முத்தியில் சேர்ப்பதும், நான்கு வேதங்களிலும் உண்மைப் பொருளாயிருப்பதும், இறைவனது திருநாமமாகிய நமசிவாய எனும் ஐந்தெழுத்தே ஆகும்.

## அப்பர் தேவாரம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
    மீளாமே ஆளென்னைக் கொண்டாய்
போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
    ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
    ஆறங்க நால்வேதமானாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி

- தேவர் உலகமாகி, அதன் வேறாகிய உலகங்களும் ஆகி நின்றவரே! உமக்கு வணக்கம்.
- அடியேனை மீட்கப்படாத அடிமையாக ஏற்றுக் கொண்டவரே! உமக்கு வணக்கம்.
- மன வாக்குகளுக்கு எட்டாத இடத்தில் துணிவு உடையவராய் அமர்கின்றவரே! உமக்கு வணக்கம்.
- நன்கு காற்றினைப் போல எங்குங் கலந்தவரே! உமக்கு வணக்கம்.
- நான்கு வேதங்களும் ஆனவரே! உமக்கு வணக்கம்.
- திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருப்பவரே! உமக்கு வணக்கம் (5)

## சுந்தரர் தேவாரம்

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானை
பின்னை என் பிழையைப் பொறுப்பானை
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத்து
அணி ஆரூரானை மறக்கலும் ஆமே.

- பொருட்செல்வத்தையும் அருட்செல்வத்தையும் தருபவனை, உலக இன்பத்தையும், முத்தி இன்பத்தையும் சேர்ப்பவனை, நான் செய்யும் குற்றங்களை பொறுப்பவனை.
- மேலும் குற்றங்கள் வராதபடி தடுப்பவனை, இப்படிப்பட்டவன் என்றும் யார்க்கும் அறியமுடியாத எங்கள் இறைவனை, அடியேனுக்கு இரங்கி எளிதாக எழுந்தருளிக் கிருபை செய்தவனை, அன்னப் பறவைகள் வாழ்கின்ற வயல்களை உடைய திருவாரூரில் வீற்றிருப்பவனை மறக்கக் கூடுமோ? (மறத்தல் கூடாது என்பதாம்.) (6)

## மாணிக்கவாசகர் திருவாசகம்

கடையவனே எனைக் கருணையினால் கலந்தாண்டு கொண்ட
விடையவனே எனை விட்டிடுதி கண்டாய் விறல்
வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே!
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னை தாங்கிக்கொள்ளே.

- கடையவனாகிய என்னை இரக்கத்தால் ஆண்டுகொண்ட இடப வாகனத்தை உடையவனே!
- அடியேனைக் கைவிட்டு விடுவாயோ, (விட மாட்டாய்!) வலிமிக்க புலித்தோலை ஆடையாக உடையவனே!
- உத்தரகோச மங்கை என்னும் திருத்தலத்தில் அரசு வீற்றிருப்பவனே! சடையை உடையவனே!
- அடியேனை நீயே தாங்கிக் காத்தருள வேண்டுகிறேன்.

## சேந்தனார் திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு
கண்டுள்ளம்!

- அறிஞர்கள் அனுபவிக்கும் கற்பகக் கனி போன்றவனும், எல்லையற்ற பெரிய கடலைப் போன்ற இரக்கம் உள்ளவனும், பத்தரல்லாதாரால் அறிய முடியாத மாணிக்கமலை போன்றவனும், பகைவரது திரிபுரங்களை எரித்தவனும், திருவீழிமிழலையில் வீற்றிருப்பவனாகிய சிவபெருமானைக் கண்டு என் உள்ளமும், கண்களும் குளிர்ந்தன.

## உமாதேவியார் துதி

தொடுக்குங் கடவுட் பழம்பாடல் தொடையின்
பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்குந் தொழும்பர் உளக் கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமைய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்ந்திருக்கும்
உயிர் ஓவியமே மதுகரம் வாய்
மடுக்கும் குழற்கா டேந்தும் இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே

- வேதப் பொருளின் பயனாய் உள்ளவளே! அகத்துறை, புறத்துறை ஆகிய துறைகளையுடைய இனிமைமிக்க தமிழ் மொழியிலிருந்து ஒழுகுகின்ற இனியசுவை போன்றவளே!
- ஆணவமாகிய அடிமுதலைக் கல்லி எடுக்கும் தொண்டர்கள் உள்ள கோயிலுக்கு ஒளி வீசும் விளக்குப் போன்றவளே!
- இமயமலையில் விளையாடித் திரியும் பெண்யானை போன்றவளே!
- கடலை ஆடையாக உடைய உலகத்தை கடந்து நின்ற சிவபிரான் தனது திருவுள்ளத்தில் அழகு ஒழுகும்படி எழுதி பார்க்கும் உயிரையுடைய சித்திரம் போன்றவளே!
- வண்டுகள் உண்ணுகிற தேனையுடைய மலர்சூடிய கூந்தலையுடையவளே! இளவஞ்சிக்கொடி போன்றவளே!
- மலயத் துவசபாண்டியனின் அருமைப் புதல்வியே! வருக! வருகவே!

கரும்பு முரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித் தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனங் குழைத் தென்னை எடுத்தாண்ட
அங்கயற் கண் எம்பிராட்டி
அரும்பும்இள நகைபோற்றி ஆரண நூபுரஞ்
சிலம்பும் அடிகள் போற்றி

- வண்டுகள் பாடுகின்ற வாசனையுடைய மலர் சூடிய குழலை உடையவளும், மேலாடையையும் தோள்வளைகளையும் அணிந்தவளும் வில்லையொத்த கரியபுருவம் உடையவளும், திருஞானசம்பந்தருக்குத் திருமுலைப்பால் ஊட்டியவளும், எனது இரும்பு போன்ற கடின மனத்தை

இளக்கி என்னை எடுத்தாண்டருளியவளும், அழகிய மீன்போன்ற கண்களையுடைய மீனாட்சியாகிய உமாதேவியாரது முல்லை அரும்புபோன்ற இளநகைக்கும், வேதமாகிய சிலம்பு ஒலிக்கின்ற திருவடிகளுக்கும் வணக்கம்.

## நடராஜர் துதி
## அப்பர் தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண்சிரிப்பும் பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும் இனித்தம் உடைய
எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்

❖ வளைந்த புருவமும், கோவைக் கனிபோன்ற சிவந்த வாயில் காணப்படும் புன்சிரிப்பும், குளிர்ந்த சடையும், பவளத்தை ஒத்த சிவந்த மேனியில் பூசிய பால் போன்று வெண்ணிறம் பொருந்திய திருநீறும், இன்பத்தைத் தருகின்ற தூக்கிய திருவடியும் காணும் பேறுபெற்றால், இவ்வுலகத்தில் (இழிந்து) மானுடப் பிறப்பும் வேண்டுவதேயாகும்.

## சேக்கிழார் பெரிய புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாய் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

- இளம்பிறை விளங்குகின்ற சடைமுடியையுடையாய்! உனது திருநடனக் கூத்தைக் கண்டு வழிபடப்பெற்ற மனிதப்பிறவியே எனக்கு மிகுந்த இன்பம் என்று கூறி கண்களிலிருந்து ஆனந்தநீர் சொரியக் கைகளைத் தலைமேல் குவித்து இசையோடு கூடிய பதிகத்தைப் பாடிப் பரவி வழிபட்டார்.

## தட்சிணாமூர்த்தி துதி

பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்க முதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.

- நான்மறை ஆறங்கம் முதலிய நூல்களில் வல்ல சனகர், சனந்தனர், சநாதனர், சனற்குமார் எனும் முனிவர்களுக்கு ஆலவிருட்சத்தினடியில் குருமுகமாய் வீற்றிருந்து தாமே எல்லாப் பொருளுமாயும், அப்பொருளில் நீங்கிய தன்மையுமாயும் இருக்கின்ற நிலையைச் சொல்லாமல் மௌன நிலையிலேயே உணர்த்தியருளியவரை (தட்சிணாமூர்த்தியை) தியானித்துப் பிறவிநோயை நீக்குவாம்.

## திருமால் துதி

## தொண்டரடிரப்பொடி ஆழ்வார்

“பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.”

- பசுமை நிறம் பொருந்திய மலைபோன்ற திருவுருவத்தையும், பவளத்தின் நிறம் பொருந்திய சிவந்த அழகிய வாயையும், தாமரை மலர்போன்ற கண்களையும்உடைய அச்சுதனே! அமரர்களுக்குத் தலைவனே! இடையர்குலத்தின் கொழுந்தே! என்று உன் நாமத்தைச் சொல்லும் சுவையையன்றி இந்திரலோகம் ஆளும் அச்சுவையை வலியப்பெற்றாலும் நான் வேண்டேன். (16)

## குலசேகராழ்வார்

“தருதுயரம் தடாயேல் உன்சரணல்லால் சரணில்லை
விரைகுழவும் மலர்ப் பொழில்சூழ் வித்துவக்
கோட்டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள் நினைந்தே அழுங்குழவி அதுவே
போன்றிருந்தேனே.”

- வாசனை மிகுந்த மலர்களையுடைய சோலை சூழ்ந்த வித்துவக் கோடென்னும் திவ்வியத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் திருமாலே! அடியேனுக்கு நீர்தரும் துயரத்தை நீரே தடுக்காவிட்டால், உன் திருவடியை அல்லாமல் எனக்கு வேறு கதிகிடையாது. தாய் கோபத்தால் சினந்து குழந்தையை ஒதுக்கித் தள்ளினாலும் அவள் அருளையே

நினைத்து அழுகின்ற குழந்தையைப் போல நான் இருக்கின்றேன். (17)

## திருமகள் (இலட்சுமிதேவி) துதி

" செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்தொளிரும்
எழில் மேனித் திருவே! வேலை
அங்கணுலகில் இருள் துரக்கும் அலர்
கதிராய் வெண்மதியாய் அமரர்க்கு ஊட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே!
நெடுங்கானில் பொருப்பில் மண்ணில்
எங்குளைநீ அவணன்றோ மல்லல்
வளஞ் சிறந்தோங்கி இருப்பதம்மா"

- செந்தாமரை மலரில் வீற்றிருந்தருளும் அழகிய மேனியையுடைய இலட்சுமி தேவியே! சூரியன், சந்திரன், அக்கினி வடிவாய் உலகளிக்கும் பூங்கொடியே! காட்டில், மலையில், புவியில், எங்கு நீ இருக்கின்றாயோ, அவ்விடத்தில் அன்றோ செல்வவளம் பொருந்தி இருக்கின்றது. (18)

## சரசுவதி துதி

## குமரகுருபரர் சகல கலாவல்லிமாலை

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனும்
என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய் உளங்கொண்டு
தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பால் அமுதந் தெளிக்கும்
வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

- ❖ கவியும், கவியின் பொருளும், பொருளால் அடையும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கும், என்னிடத்தில் சேரும்படி திருக்கண்ணோட்டத்தை அருள்வாயாக.
- ❖ மனத்தினால் அடியார்கள் இயற்றுகின்ற தமிழ்க் கலையாகிய பாலமுகத்தில் உள்ள குணம், குற்றங்களை, அன்னப்பறவை பாலையும் நீரையும் பிரித்து உண்ணுவதைப் போலப் பிரித்து, குற்றங்களைந்து குணங்கொண்டு அருளுகின்ற வெண்மை நிறம் பொருந்திய அன்னம் போன்றவளே! எல்லாக் கலைகளுக்கும் இறைவியாகிய சரசுவதி தேவியே! உனக்கு வணக்கம்.

<u>முருகன் துதி</u>

<u>அருணகிரியார் திருப்புகழ்</u>

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

- ❖ உத்தம குணங்களை உடைய நல்லோர்களின் சிநேகிதரே!
- ❖ ஒப்புச் சொல்ல முடியாத பெருமை பொருந்திய இரத்தினகிரியில் வாழ்பவரே! முற்றறிவுடையவரே!
- ❖ திருவருள் ஞானம் பதியவைப்பரே!
- ❖ வெற்றியைத்தரும் வேலாயுதத்தை ஆயுதமாகக் கொண்ட பெரியவரே! அடியேன் உம்மை அன்பினால் பற்றிப் பீடித்துத் திருப்புகழைப் பலகாலும் ஓதி ஜீவன் முத்தனாகும்படி வேண்டுகிறேன். திருவருள் புரிவீராக. (20)

## கந்தரலங்காரம்

முடியாப் பிறவிக் கடலிற் புகார் முழுதுங் கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்படார் வெற்றி வேற் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர்குலம் அடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்வரே.

- வெற்றி பொருந்திய வேலாயுதத்தைத் தாங்கியவரும், அடியார்களுக்கு நன்மையைக் கொடுக்கின்றவரும், அரக்கர்களுடைய கூட்டம் அடங்கும்படி தூள்படுத்தியவரும் ஆகிய முருகப் பெருமானுடைய தெய்வீக நாமத்தைக் கூறுகின்றவர் கடக்க முடியாத பிறவிப் பெருங்கடலில் முழுகமாட்டார்கள். எல்லா நலன்களையும் கெடுக்கும் வறுமை நோயால் இவ்வுலகில் துன்பப்பட மாட்டார்கள்.

### கந்தரனுபதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

- காணும் பொருளாயும் காணாப் பொருளாயும், உள்ளப் பொருளாயும் இல்லாப் பொருளாயும், மணமாயும் மலராயும், மணியாயும் அதன் ஒளியாயும், காரணங்களுக்கு மூலமாயும் அதன் உயிர்த் தொகுதியாயும், அவை அடையும் பேறாயும், அவை கடந்த வேதம் முதலிய விதி நூல்களாயும் விளங்குகின்ற முருகா! நீர் எனக்குக் குருவாய் எழுந்தருளி அருள்புரிவீராக.(22)

**கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணம்**

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
யாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

❖ காஞ்சித்தலத்தில் மாவடிக்கீழ் வீற்றிருக்கின்ற முருகப் பெருமானின் ஆறு திருமுகங்களுக்கும், அம்முகங்களிலிருந்து பொழிகின்ற கருணை ஒழுக்கிற்கும், தேவாதி தேவர்களும் வணங்குகின்ற பன்னிரண்டு தோள்களுக்கும், மலரடிகளுக்கும், அவனது சேவற்கொடிக்கும், மயிலூர்திக்கும், திருக்கையில் விளங்குகின்ற வேலாயுதத்திற்கும் வணக்கம்.

**சண்டேசுரர்**

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற்கு
அமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனாடைகள் பிறவும் வேறு
தனக்கென்று அமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும்
பயனை அடியார்கள்
துன்னும்படி பூசனைகொள்ளும் தூயோ
னடித்தாமரை தொழுவோம்.

❖ பொன்னிறம் பொருந்திய கொன்றை மாலையை முடியில் தரித்த சிவபெருமானுக்கு அமைத்த பொருள்களன்றி (நிவேதனம், மலர்கள், ஆடைகள் முதலியவை) தனக்கென்று வேறு இல்லாமல், சிவபூசை, சிவதரிசனம் முதலியவற்றின் பலனை அடியார்களுக்கு அருளும்படிச் சிறப்புப் பெற்ற சண்டிகேசுரர் அடிமலர்களைத் துதிப்போம்.(24)

**திருநந்தி தேவர் துதி**

## திருவிளையாடல் புராணம்

"வந்திறை அடியில் தாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலும் தொண்டர் அலகிடும் குப்பையாக்கும்
நந்தியெம் பெருமான் பாதநகை மலர் முடிமேல் வைப்பாம்."

- சிவபெருமானது திருவடிகளில் தொழுகின்ற தேவர்களது மகுடங்களில் உள்ள இரத்தினங்கள் சிந்தும்படித் தனது கைப்பிரம்பினால்தாக்கி சிந்தும் மணிகள் அடியார்கள் காலையும், மாலையும் அலகிடும் வண்ணம் செய்தருளுகின்ற நந்தியெம் பெருமானது திருவடி மலர்களைச் சிரத்தில் அணிந்து கொள்வாம். (25)

## நவக்கிரக தோஷம் நீக்கும் துதி
## சம்பந்தர் கோளறு பதிகம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

- மூங்கிலை ஒத்த தோள்களையுடைய பார்வதி தேவியை இடப்பாகத்தில் உடையவரும், விடமுண்ட கழுத்தையுடைய வீணையை மீட்டுபவரும், குற்றமற்ற சந்திரன், கங்கை முதலிய முடிமேல் வைத்தவருமான சிவபெருமான் எனது உள்ளத்தில் வீற்றிருந்தருளும் காரணத்தால் ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேதுக்களாகிய நவக்கிரக அடியார்களுக்கு குற்றமற்றவைகளாய் நன்மையே செய்யும் நன்மைகளையே செய்யும்.

## வாழ்த்து
## சம்பந்தர் தேவாரம்

வாழ்க அந்தணர் வானவர் ஆணினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

- அந்தணர்களுக்கும், தேவர்களுக்கும், பசுங்கூட்டங்களும் வாழக் கடவர். குளிர்ந்த புனல் (மழை) பருவந்தவறாமல் பெய்வனவாகுக நீதி ஓங்கி. தீமைகள் மேலெழும்பாது ஆழ்ந்து, எங்கும் இறைவன் நாமமே சூழ்ந்து, வையகமும் துன்பம் நீங்கும் இன்புறுவதாகுக.

## <u>கந்தபுராணம்</u>

“வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்
மழை தவறாமல் பொழிக வளங்கள் சுரக்க

அரசன் நீதிமுறை வழுவாது அரசு செய்க
குறைவின்றி உயிர்கள் வாழ்க
வேதங்களும், அதில் விதிக்கப்பட்ட தர்மங்களும் ஓங்குக
தவமும், வேள்வியும் பெருகுக
மேன்மை பொருந்திய சைவ நீதி
உலகம் முழுவதும் விளங்குக.”

“ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்கவெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியார் எல்லாம்.”

- முருகப் பெருமானது விசாலமான பன்னிரண்டு தோள்கள் வாழ்க. அவரது ஆறுமுகங்கள் வாழ்க.
- மலையைக் கூறுசெய்த அவரது வேலும், அவர் ஏறிய மயிலும் வாழ்க.
- தெய்வானை அம்மையும். வள்ளியம்மையும். வாழ்வார்களாக. அடியார்கள் அனைவரும் வாழ்க. (29)

## ஜபம்

அருட்பெருஞ் சோதி!
தனிப் பரம்பொருளே!
அடியருக்கருளும் ஆனந்தத்தேவே!
உன் அடிமலர் இணைகட்கு
அடைக்கலம் அடைக்கலம்.

- உனது அண்டப் படைப்பில் அடிமையின் நிலைமை அணுவிலும் அணுவென அறைதலும் அதிகமே
- ஆயினும் எமை நீ அன்னையைப் போல அன்புடன் பேணி அருள் புரிகின்றனை
- இன்னமும் எங்கள்தம் இருவினை நீக்கி இன்னருள் அளித்திடும் முதல்வா! எந்தம் சித்தம் திருந்திச் சீர்பெறச் செய்வாய்!
- தீய செயல்கள் சிறிதளவும் யாம் செய்யாதிருக்கத் திருவருள் புரிவாய்!
- பிறப்பெனும் பெருநோய் பிடித்திடாதெமக்குச் சிறப்புடன் முத்தி சீருடன் அருளே!

------*****-----*****-----